விலை: சதம் 75 ★★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 கார்த்திகை 7 முஹரம் 24 இதழ் 280

யாழ். ஞாயிற்றுக்கிழமை 22-11-81

(கொழும்பு)

அரசாங்கத்தின் கொள்கையில் பொறுப்புவாய்ந்த இயக்கனைக்கையும், அமைச்சரவையும் தமக்குள்ளே ஒருவரை ஒருவர் தாக்கிப்பேச அனுமதிப்பது வும்மென்றுதமா!

இவ்வாறு பாணந்துறை எம்.பி. திரு. நெவில் பெர்னாண்டோ பாராளுமன்ற கூட்டத்தில் விளையாட்டுத்துறை அமைச்சரை நோக்கி கேட்டார்.

திரு. உபாலி விஜேவர்த்தனவை பாரிய ஏழு பிரதான ஆதாரத் திட்டத்தின் இயக்குனராக நியமித்தது. நிதியமைச்சர் வர்ணிப்பது போல திரு உபாலி உண்மையிலேயே கூக்கக்காரன் அல்லது ஏமாற்றுப் பேர்வழியா என்றும் அவர்

## நிதியமைச்சர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

### நெவில் பெர்னாண்டோ கேள்வி

கேட்டதுடன் அரசாங்கம் இத்தகைய குற்றச்சாட்டுக்கள் பொய்யானவையாயின ஜனாதிபதியை சர்ச்சைக்குள்ளாக்கி அமைச்சர் நிதி மந்திரி மீது நடவடிக்கை எடுக்குமா? அல்லது ஒழுங்கு நடவடிக்கைகள் பின் வாங்கிவிடுகின்றதும் ஏனைய உறுப்பினர்கள் மீது மட்டும் தான் எடுக்கப்படுமா என்றும் வினவினார்.

திரு. நெவில்பெர்னாண்டோ மேலும் ஒரு கேள்வியை நிதியமைச்சரிடம் கேட்டார். அதில் திரு உபாலி மீது நிதியமைச்சரான சுமத்தியுள்ள வரிக்கை மோசடி சம்பந்தமான ஏதும் பிடியிலிருந்து பிறப்பிக்கப்படவில்லை என வினவினார். அத்துடன் கடத்தல், மோசடி சம்பந்தமாக திரு. உபாலி மீது குற்றச்சாட்டுக்கள் ஏதும் உண்டாவெனவும் கேட்டார்.

மேலும் டாக்டர் நெவில் பெர்னாண்டோ இருதினங்களுக்கு முன்னர்தான் பிரதமரிடமும், நிதியமைச்சரிடமும் திரு. உபாலி விஜேவர்த்தனவுடன் ஐக்கியப்படுமாறு கேட்டுக்கொண்டதாகவும் எவ்வோ

(6-ம் பக்கம் பார்க்க)

# புதிய பாராளுமன்றத்தில் பஜட் குழுநிலை விவாதம்?

(கொழும்பு)

வரவுசெலவுத் திட்டம் மீதான குழு நிலைவிவாதம் கோட்டை ஜயவர்த்தன புரத்தில் கட்டப்பட்டுவரும் புதிய பாராளுமன்றக் கட்டிடத்திலேயே நடைபெறக்கூடும் என்று நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

வரவுசெலவுத்திட்டம் மீது இவ்வேளை நடைபெற்றுவரும் பொது விவாதம் முடிவுற்றதும் சபை இடை நிறுத்திவைக்கப்பட்டு பெப்ரவரிமாதம் 19ம் திகதி புதிய பாராளுமன்றம் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டதும் தொடர்ந்து குழு நிலை விவாதம் அங்கு ஆரம்பமாகும் என்று சொல்லப்படுகின்றது.

அன்றைய தினம் இப்போதைய கட்டிடத்தில் உறுப்பினர்கள் முதலில் கூடுவார்கள் என்றும் புதிய கட்டடத்துக்கு ஜனாதிபதி ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்தியதின் பின் அவர் தலைமையிலேயே ஊர்வலமாக புதிய கட்டடத்துக்குச் செல்வர் என்றும் அங்கு புதிய கட்டிடம் ஜனாதிபதியால் திறந்துவைக்கப்பட்டதின்பின் விவாதம் ஆரம்பமாகும் என்றும் கூறப்படுகின்றது.

யாழ். நகரில்

## பெருந் தீ விபத்து தவிர்க்கப்பட்டது

(ஏ. விக்னேஸ்வரன்)

யாழ். நகரில் நெருக்கடி மிக்க ஒருஇடத்தில் தொழிற்சாலையொன்றில் ஏற்பட்ட தீவிபத்து பொலிசாரினதும் ஊழியர்களதும் சமயோசித நடவடிக்கையால் தீ பரவாமலும் பாரிய நட்டம் ஏற்படாமலும் தவிர்க்கப்பட்டது.

நகரிலுள்ள ஒரு கண்ணாடித் தொழிற்சாலையில் இத் தீவிபத்து ஏற்பட்டது. இயந்திரக் கோளாறே தீவிபத்துக்குக் காரணம் என்று கூறப்பட்டது.

தீப்பற்றத் தொடங்கியதும் தொழிற்சாலையில் வேலை செய்துகொண்டிருந்த ஊழியர்கள் தீயை அணைக்க முயற்சித்துக்கொண்டிருந்த அதே வேளையில் யாழ் பொலிஸ் நிலைய தலைமைக் காரியாலயப் பதில் பொறுப்பதிகாரி சின்னையா யோகருப்பிரமணியத்துக்கு தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது.

திரு யோகருமாரன் தலைமையில் இன்ஸ்பெக்டர்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

## விண்வெளியில் பாஸ்கரா - 2

புதுடில்லி, நவ. 22

நேற்று சோவியத் நிலையம் ஒன்றிலிருந்து செலுத்தப்பட்ட இந்தியச் செயற்கைக் கிரகமான பாஸ்கரா - 2 சீராகச் செயல்பட்டுவருவதாக அறிவிக்கப்பட்டது.

இந்தியாவிலுள்ள தரைத் தொடர்பு நிலையங்களுக்கு இக்கிரகத்திலிருந்து தகவல்கள் ஒழுங்காகக் கிடைப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

## திருவாசகப் போட்டி முஸ்லிம் பெண் முதலிடம்

சென்னை நவ. 22

திருவாசகம் பாடும் போட்டியில் முஸ்லிம் பெண் ஒருவர் முதல் இடத்தைப் பெற்றார்.

தஞ்சாவூர் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட திருவாசகம் பாடும் இப்போட்டியில் செய்யத் மீரா என்ற முஸ்லிம் பெண் வெற்றி பெற்றார்.

அகில இலங்கை

## நடன, நாடகப் போட்டியில் யாழ்மாவட்டம் முன்னிடம்

மட்டக்களப்பு

கல்வி அமைச்சினால் அகில இலங்கை ரீதியில், 62 தமிழ் மொழிப் பாடசாலைகளுக்கிடையில் நடந்த நடன நாடகப் போட்டியில், யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகள் 26 முதலிடங்களைப் பெற்றுக் கொண்டன.

இப்போட்டி மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

மற்றும் முதலிடங்கள் பெற்ற மாவட்டங்கள் விபரம் மட்டக்களப்பு -11, திருகோணமலை -6, வவுனியா-7, பதுளை-2, முல்லைத்தீவு-5, கல்முனை-5

## வீட்டுக்காரரைக் கட்டிவைத்து 65 ஆயிரம் ரூபா நகைகள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

பயங்கர ஆயுதங்களுடன் சென்ற 7 பேர்கொண்ட கொள்ளைக்கோஷ்டி வசாவிளானிலுள்ள வீடொன்றில் சுமார் 65 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் பொருட்களையும் கொள்ளையடித்துள்ளது.

வீட்டிலுள்ளவர்களை கட்டிப்போட்டுவிட்டே இக் கொள்ளையை நடத்தியதாக கூறப்படுகிறது.

வசாவிளானைச் சேர்ந்த தம்பித்துரை என்பவர் வீட்டிலேயே நேற்று முன்தினமிரவு இக்கொள்ளை நடந்துள்ளது.

காங்கேசன்துறைபொலிசார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (மா)

## பரந்தன் ரசாயன கூட்டுத்தாபன ஊழியர்கள் விடுதிக்குச் செல்லும் தடை நீக்கம்!

(கிளிநொச்சி)

பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை ஊழியர்கள் ஏழுபேர் மீதான வழக்கு ஜனவரி மாதம் 7ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

மேற்படி வழக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை கிளிநொச்சி நீதிமன்றத்தில் நீதவான் திரு. எஸ். ஜெகசோதி முன்னிலையில் நடைபெற்றபோது சந்தேக நபர்களான திரு ஜி ஜெகநாதன், திரு. எஸ். சூரியகுமார் பொன்னையா திரு. கே. கிருஷ்ணபிள்ளை, எஸ். துரைரத்தினம் திரு. ரி. மயிலுப்பிள்ளை திரு. என். பரஞ்சோதி திரு எஸ். யோகரத்தினம் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகினர்.

சந்தேக நபர்கள் 7 பேரும் ரசாயனத் தொழிற்சாலையிலுள்ளவீடொன்றில் திருட்டில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின்பேரில் கிளிநொச்சிப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு ஏற்கனவே 500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

சந்தேக நபர்கள் தொழிற்சாலைக்குள் உள்ள அவர்களது விடுதிக்குச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்க வேண்டுமென சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணியின் வாதாட்டத்தையடுத்து அத்தடை உத்தரவு நீக்கப்பட்டுள்ளதுடன் வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 7ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சட்டத்தரணிகள் திரு. வெற்றிவேலு, திரு. சிறீபதி ஆகியோரின் அனுசரணையுடன் சட்டத்தரணி திரு. சிவலோகநாதன் எதிரிகள் தரப்பில் ஆஜராகியிருந்தார்.

அரசாங்க தரப்பில் பொலிஸ் சார்ஜன்ட் திரு. எஸ். குணரத்தினம் ஆஜரானார். (கொ)

பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபனம்

## அறிவித்தல்

1981 நவம்பர் 4-ந் திகதிக்குப் பின் வேலைக்குச் சமூகமளிக்காத பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபன ஊழியர்கள் அனைவரும் உடனடியாகத் தமது வழமையான வேலைக்குத் திரும்ப வேண்டுமென இதனால் அறிவிக்கப்படுகிறார்கள். வழமையான வேலை என்பது வழமையோல் தேவை ஏற்படுமிடத்து நியாயமான மேலதிக நேர வேலை செய்வதை உள்ளடக்கும் என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

1981 நவம்பர் 25-ந் திகதி மு. ப. 8.00 மணிக்கு அல்லது அதற்கு முன் வேலைக்குச் சமூகந்தரத் தவறும் ஊழியர்கள் தமது பதவிகளிலிருந்து தாமாகவே விலகிக்கொண்டதாகக் கருதப்படுவதுடன் கூட்டுத்தாபனத்தில் தொழில்வாய்ப்புப் பெற்றுக்கொள்ள மேற்கொண்டு எதுவித உரிமையுமற்றவர்களாவார்கள்

எம். வை. அபேவர்த்தன

தலைவர் / முகாமைப்பணிப்பாளர்

பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபனம்.

1516

ஐ. நா. வுக்கு

## சர்வதேச மன்னிப்புசபை விடுத்துள்ள கோரிக்கை

ஜெனிவா நவ. 22

'மனச்சாட்சி கைதிகள்' உட்பட சிலவகை கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை விடுத்துள்ள கோரிக்கைக்கு ஆதரவாக அங்கத்துவ நாடுகள் செயற்படுகின்றனவா என்பதை ஐ நா. சபை நுணுக்க

(6-ம் பக்கம் பார்க்க)

# அரிசி விற்பனையைக் கண்காணிக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

நெல் சந்தைப்படுத்தும் சபையின் நிலையங்களில் அரிசி விற்பனவு செய்வது கவனிக்கப்படவேண்டுமென உணவு கூட்டுறவுத்துறை உப குழு தீர்மானித்துள்ளது.


யாழ் செயலகத்தில் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு சு. நடராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

அபிவிருத்திசபை உறுப்பினர் திரு சு சோமசுந்தரம், உதவி உணவு கட்டுப்பாட்டாளர் திரு. ஜே எஸ் எஸ் ஆனந்தன், விலைக் கட்டுப்பாட்டு உதவி ஆணையாளர் திரு த மார்க்கண்டு. உதவி கூட்டுறவு ஆணையாளர் திரு. எஸ் ஞானப்பிரகாசம், விற்பனைத் திணைக்கள பிரதி ஆணையாளரும் இக்குழுவின் பிரதிச் செயலாளருமான திரு எஸ் கணேசநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நெல் சந்தைப்படுத்தும் சபையின் விற்பனவு நிலையங்கள் கூடுதலாகத் திறக்கப்படுவதுடன் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனைத் திணைக்கள நிலையங்கள் ஆகியவற்றினூடாகவே இந்த அரிசி விற்பனை செய்யப்படவேண்டுமென இக்குழு முடிவு செய்துள்ளது.

மரக் கூட்டுத்தாபனத்தின் புதிய கொள்கையினால் வலிகாமம், கூட்டுறவுச் சங்கங்களில் விறகுகாலைகளை நடாத்துவதற்கு ஏற்ற உத்தரவாதத்தை அளிக்க முடியாத நிலையில் உள்ளதென இக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இதுசம்பந்தமாக மரக்கூட்டுத்தாபனத் தலைவருடன் தொடர்பு கொள்வதாக அபிவிருத்திசபைத் தலைவர் உறுதியளித்தார்.

புங்குடுதீவு கூட்டுறவுச் சங்க படகு சம்பந்தமான இயந்திரம் பொருத்துவது பற்றியும் அது பற்றிய தகுந்த அறிக்கை கிடைக்கும் வரை இயந்திரப் படகு வேலைகள் இடைநிறுத்திவைக்கவேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டது. (ஈ)



யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஏ. கே. எம். கிருடியாவை யாழ்ப்பாணம் மேயர் திரு இராஜா விஸ்வநாதன் மங்களவிளக்கேற்றி வைப்பதையும், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஸ்ருடியோவை திறந்து வைப்பதையும். யாழ்ப்பாணம் பாராளுமன்ற உறுப்பினர் திரு வெ யோகேஸ்வரன் சமரசவை இயக்கி வைப்பதையும், யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா வியாபாரத்தை ஆரம்பித்து வைப்பதையும் படத்தில் காணலாம். பிரபல வர்த்தகர் வி இராமநாதனும் காணப்படுகிறார்.

# துன்னாலை ராஜகோபால் கொலைவழக்கு 2 எதிரிகளும் பிணையில் செல்ல அப்பீல் நீதிமன்றம் அனுமதி

(புலோலி)

துன்னாலை இராஜகோபால் கொலை வழக்கு எதிரிகள் இருவரை தலா 2500 ரூ உறுதி பத்திரப்பட்ட பிணையில் செல்வதற்கு அப்பீல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த வைகாசி மாதம் 19ம் திகதி துன்னாலை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கொலை செய்யப்பட்டு இலைக்கயிற்றில் தொங்கவிடப்பட்டிருந்த துன்னாலை வாலிபர் இராசஇராஜகோபாலைக் கொலை செய்தார்கள் எனக் குற்றஞ்சாட்டிப் பருத்தித்துறைப் பொலிசார் சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம், மாணிக்கம் சின்னத்தம்பி, வடிவேலு சரவணமுத்து ஆகியோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இக்கொலை வழக்கின் 1ம் எதிரியான சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் ஏற்கனவே யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார். 2ம் எதிரியான மாணிக்கம் சின்னத்தம்பிக்கும் 3ம் எதிரியான வடிவேலு சரவணமுத்துக்கும் யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் பிணை அனுமதியை மறுத்திருந்தது.

இக்கொலை வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு சே. எஸ். [illegible] முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்பட்டது.

2ம், 3ம் எதிரிகளைப் பிணையில் விடுமாறு கோரி சட்டத்தரணிகளான டீ. எஸ். [illegible], ஆர். ஸ்ரீனிவாசன் ஆகியோர் அப்பீல் நீதிமன்றத்தில் அப்பீல் செய்திருந்தனர். இம்

(5ம் பக்கம் பார்க்க)

# அரச பிரசுரங்கள் தமிழிலும் வெளியாக வேண்டும்!

(யாழ்ப்பாணம்)

கல்வி வெள்ளையறிக்கை சிங்களத்தில் வெளியாகி அதன் பிரதி ஆங்கிலத்திலும் கிடைக்கிறது. ஆனால் தமிழ் பிரதி பெற முடியாமலிருக்கிறது. இது வேதனையளிக்கிறது. இனிமேலாவது அரசாங்க பிரசுரங்கள் சிங்களத்தில் வெளியாகும் போது தேசிய மொழியான தமிழிலும் வெளியாக வேண்டும்.

அகில இலங்கை ஓய்வூதியம் பெறும் ஆசிரியர் சங்க கமிட்டி கூட்டத்தில் மேற்படி தீர்மானம் நிறைவேறியது.

பண்டிதர் சே. சங்கரப்பிள்ளையால் பிரேரிக்கப்பட்டு திரு. கி. சண்முகநாதனால் வழிமொழியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. [ஈ]

## நிர்வாக மேற்பார்வையாளர்

(யாழ்ப்பாணம்)

வலி தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு அருணாசலம் [illegible] மானிப்பாய் கிராமசபையின் நிர்வாக மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## லக்சலா வருமானம்

லண்டன், நவ. 20

[illegible] பெற்ற 50வது வருட விழாவை யொட்டி லண்டனில் நடந்த விற்பனையில் லக்சலா 7லட்சத்து 50ஆயிரம் ரூபாவை வெளிநாட்டு செலாவணியாக பெற்றுத் தந்துள்ளது. சித்திர வேலைப்பாடுகள், [illegible] விற்பனை நடந்தன (ஈ)

## நடப்பு வருட நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் புனித மிக்கேல் சனசமூக நிலையத்தின் 10-வது ஆண்டுப் பொதுக் கூட்டம் நிலைய முன்னாள் தலைவர் திரு. ம. பத்திநாதன் தலைமையில் நடைபெற்றது. புதிய உத்தியோகத்தர் தெரிவில் போஷகர் வண பிதா [illegible] ஜோசப் அடிகளார், தலைவர் திரு. [illegible] பரிமளம், உபதலைவர் திரு. ஆ. மதநாயகம், செயலாளர் திரு ம. பேரின்பநாதன், உபசெயலாளர் திரு செ. ஜே. கந்தசாமி, பொருளாளர் திரு. இ. கொர்னேலிஸ்.

ஆறு பேர் கொண்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஈ)




பிளேன் தேநீர் + 30 சதம் =ஒரு கோப்பை சுவை பொருந்திய பால்தேநீர்






இனிப்பூட்டப்பட்ட கட்டிப்பாலிலிருந்தே உங்களுக்கு இந்தச் சிறந்த சுவை இடைக்கிறது.

ஒரு ரின் பொரகும், உங்கள் சுவைக்கு ஏற்றவாறு உங்களுக்குத் தருவது 25 - 30 கோப்பை பால் தேநீர்,

ஒரு கோப்பை பால் தேநீருக்கு ஆகும் மேலதிகச் செலவு 30 - 35 சதம் மட்டுமே!

விநியோகிப்போர்:
நெஸ்லே தயாரிப்புகளின் ஏக விநியோகஸ்தர்களான சிலோன் நியூட்ரிஷனல் ஃபூட்ஸ் லிமிட்டெட்

இப்போது ரூ 9-90

பொரகும்

இனிப்பூட்டப்பட்ட கட்டிப்பால்

Grant K & E 4191

